
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2013 ஓகஸ்ட்**

வினாத்தாள் - I — 45 நிமிடம்

- தொடக்கத்தில் உள்ள உருவில் குறைவாக இருக்கும் பகுதிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.


1\.






(1) (2) (3)


2\.





(1) (2) (3)

- பின்வரும் வரிப் படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையைத் தெரிவுசெய்க.




www.Edukinniya.lk

3\. வரிப் படத்திற்கு ஏற்ப ஒரு முயல் இருக்கத்தக்க இரண்டு இடங்கள்
(1) 2 உம் 4 உம் (2) 3 உம் 5 உம் (3) 1 உம் 2 உம்

4\. ஒரு பறவை இருக்கத்தக்க இடத்தையும் ஒரு மீன் இருக்க முடியாத இடத்தையும் முறையே காட்டுவன
(1) 1 உம் 4 உம் (2) 3 உம் 6 உம் (3) 2 உம் 5 உம்

- தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டு ஒத்தவை. அந்த இரண்டு உருக்களும் யாவை?


5\.



A B C

(1) A யும் B யும்
(2) B யும் C யும்
(3) A யும் C யும்

6\.




X Y Z

(1) X உம் Y யும்
(2) X உம் Z உம்
(3) Y யும் Z உம்

- கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

7\.





(1) (2) (3)

8. ∈ β Ω ∈ β ...... ∈ ...... Ω

β Ω (1) Ω β (2) Ω ∈ (3)

• கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண்கள் யாவை?

9. 8, 10, 11, 12, 14, 16
(1) 11 (2) 10 (3) 8

10. 30, 22, 25, 20, 18, 15, 10
(1) 22 உம் 15 உம் (2) 22 உம் 18 உம் (3) 25 உம் 18 உம்

• தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம் அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?

11. பத்திரிகை, பாடசாலை, சஞ்சிகை, நூலகம், புத்தகம்
(1) பாடசாலையும் புத்தகமும் (2) புத்தகமும் நூலகமும் (3) நூலகமும் பாடசாலையும்

12. மாம்பழம், பணியாரம், அன்னாசி, பாற்சோறு, வாழைப்பழம்
(1) பாற்சோறும் வாழைப்பழமும் (2) வாழைப்பழமும் பணியாரமும் (3) பணியாரமும் பாற்சோறும்

• கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

more Past papers
at www.Edukinniya.lk

பார்த்ததும் நல்ல ஆசையை உண்டாக்கும்
கண்களைச் சிமிட்டும் தலையை ஆட்டும்
அம்மா சந்தையிலிருந்து கொண்டுவந்த
அழகு மிக்க பொம்மை

13. பொம்மையைக் கொண்டு வந்து தந்தவர் யார்? எங்கேயிருந்து?
(1) அம்மா, சந்தையிலிருந்து (2) அம்மா, கடையிலிருந்து (3) அப்பா, சந்தையிலிருந்து.

14. பொம்மையின் இரு இயல்புகள்
(1) கண்களைச் சிமிட்டுதல், கைகளை ஆட்டுதல் (2) தலையை ஆட்டுதல், கண்களைச் சிமிட்டுதல்
(3) ஆடுதல், தலையை ஆட்டுதல்


15. இக்கவிதையில் முக்கியமாக எதனைப் பற்றிக் கூறப்படுகின்றது?
(1) பொம்மையின் பெறுமானம் பற்றி (2) பொம்மை கிடைத்த விதம் பற்றி
(3) பொம்மையின் அழகு பற்றி

16. "இருபத்தையாயிரத்து எண்ணூற்று இருபத்தொன்று" என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும்போது கிடைக்கும் எண் யாது?
(1) 12825 (2) 82125 (3) 12852

17. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் செங்கோணத்தில் இருக்கும் இரு சந்தர்ப்பங்களில் உள்ள நேரங்களைக் காட்டும் விடை யாது?
(1) 6.15 உம் 12.15 உம் (2) 3.00 உம் 9.00 உம் (3) 3.30 உம் 9.30 உம்

• வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க

18.




19.


| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 6 |
| 4 | .... | 3 | 24 |
| 2 | 3 | .... | 30 |
| 16 | 18 | 15 | |

(1) 5, 3 (2) 2, 5 (3) 3, 2

AptitudeExam.com

- சரியான விடையைத் தெரிவு செய்க.


20. பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு பெட்டி உள்ளது. அது விரிக்கப்படும்போது தோற்றும் விதம் யாது?



(1) (2) (3)

www.Edukinniya.lk

21. இவ்வுருவை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும்போது அது தோற்றும் விதம் யாது?




(1) (2) (3)

22. செய்தித்தாள், நாவல், கீதம், சிலை, கவிதை, பூ என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவுசெய்க.
(1) செய்தித்தாள் (2) கீதம் (3) பூ


23. சங்கரின் தந்தையின் தந்தைக்கும் சங்கரின் தம்பிக்குமிடையே உள்ள உறவு முறை யாது?
(1) சிறிய தகப்பனும் மகனும் (2) மாமாவும் மருமகனும் (3) பாட்டனும் பேரனும்

24. உருவில் உள்ள A, B, C என்னும் வட்டங்கள் ஒன்றையொன்று ஒத்தவை. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு 10 சதுர சென்ரிமீற்றர் ஆகும். முழு உருவத்தினதும் பரப்பளவு பற்றிய சரியான கூற்று யாது?




(1) 60 சதுர சென்ரிமீற்றரிலும் குறைவாகும்.
(2) 60 சதுர சென்ரிமீற்றர் ஆகும்.
(3) 60 சதுர சென்ரிமீற்றரிலும் கூடியதாகும்.

25. பின்வரும் உருவில் உள்ளவாறான ஒரு வடிவத்தைக் கோடு AB வழியே இரண்டாக மடிக்கும்போது கிடைக்கும் உரு யாது?




(1) (2) (3)

- 1, 2, 3 ஆகியவற்றுக்குப் பதிலாக ய, த, க என்னும் எழுத்துகளைப் பயன்படுத்திப் பின்வரும் கணிப்புகள் செய்யப்பட்டன. இதற்கேற்ப வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எழுத்துகள் யாவை?


26. ய + த = ...... (1) ய (2) க (3) த

27. க X ய = ...... (1) க (2) ய (3) த

- மூன்று பாடசாலைகளிலிருந்து ஒரு விழாவிற்கு வந்த ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பின்வரும் நிறங்களையும் வடிவங்களையும் கொண்ட இலச்சினைகள் வழங்கப்பட்டன.

கம்பர் பாடசாலை = நீலம், வள்ளுவர் பாடசாலை = பச்சை, இளங்கோ பாடசாலை = சிவப்பு
ஆசிரியர்கள் = வட்டம், ஆண் பிள்ளைகள் = முக்கோணி, பெண் பிள்ளைகள் = சதுரம்

28. கம்பர் பாடசாலையின் ஆண் பிள்ளைகளுக்குக் கிடைத்துள்ள இலச்சினை யாது?





(1) (2) (3)

29. பச்சைநிற வட்டம் உள்ள இலச்சினை யாருக்குக் கிடைத்தது?
(1) கம்பர் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு
(2) இளங்கோ பாடசாலையின் ஆண் பிள்ளைகளுக்கு
(3) வள்ளுவர் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு

AptitudeExam.com


30. அருணன் இந்திரனிலும் உயரங் கூடியவன். சந்திரன் அருணனிலும் உயரங் குறைந்தவன். இதற்கேற்பச் சரியான கூற்று
   (1) இந்திரனிலும் சந்திரன் உயரங் கூடியவன்.
   (2) இந்திரன், சந்திரன் ஆகிய இருவரிலும் உயரங் கூடியவர் எவரெனக் கூறுதல் கஷ்டம்.
   (3) இந்திரனும் சந்திரனும் சம உயரம் உள்ளவர்கள்.

31. இவ்வுருவுடன் தொடர்புபட்ட சரியான கூற்றைத் தெரிவுசெய்க.





   (1) பகுதி A ஆனது சிவப்பு, நீலம், மஞ்சள் என்னும் மூன்று நிறங்களுக்கும் உரியது.
   (2) B, C ஆகிய பகுதிகள் மஞ்சள் நிறமுள்ளவை.
   (3) பகுதி C நீலநிறமாக இருக்கும் அதே வேளை பகுதி D சிவப்பு நிறமானது.

32. பின்வரும் இலக்கங்களின் மீது மையைப் பூசி, அவ்விலக்கங்கள் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக் கோடு வழியே தாளை இரண்டாக மடித்து, விரிக்கும்போது கிடைக்கும் எண் யாது?




   (1) 801801
   (2) 801108
   (3) 108801

33. உருவில் உள்ள பொருளை ஒரு சதுரமுகியாகப் பூரணப்படுத்துவதற்கு மேலும் எத்தனை சிறிய சதுரமுகிகள் தேவை?




   (1) 27
   (2) 25
   (3) 17

more Past papers at www.Edukinniya.lk

34. பின்வரும் கவிதையின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?
   A. தெய்வப் புலமை வள்ளுவராம்
   B. அருமை மிக்க உண்மைகளை
   C. திருக்குறள் தந்த பேறிஞர்
   D. அழகாய் உணர்த்தும் தனிநூலாம்
   (1) B D C A   (2) DCBA   (3) BCAD

- ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி கீழே காணப்படுகிறது.




35. மேற்குறித்த பாதை நெய்யரியில் கமலா A யிலிருந்து D யினூடாக B யிற்கும் முரளி B யிலிருந்து C யினூடாக A யிற்கும் பயணஞ் செய்தனர். இதற்கேற்ப
   (1) கமலாவும் முரளியும் ஒரே அளவு தூரத்திற்குப் பயணஞ் செய்துள்ளனர்.
   (2) முரளி கமலாவிலும் கூடுதலான தூரம் பயணஞ் செய்துள்ளான்.
   (3) இருவரும் பயணஞ் செய்துள்ள மொத்தத் தூரம் 220 மீற்றர் ஆகும்.

36. மேற்குறித்த பாதை நெய்யரியில் A யிலிருந்து C யினூடாக E வரையுள்ள மிகக் குறுகிய தூரம்
   (1) 50 மீற்றர்   (2) 90 மீற்றர்   (3) 100 மீற்றர்

37. பின்வரும் ஒளிப்படத்தைப் பார்க்க. அந்த ஒளிப்படம் நாளின் எந்நேரத்தில் எடுக்கப்பட்டது என்பதைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்க.



(1) மு. ப. 6.00 அளவில்
(2) மு. ப. 10.00 அளவில்
(3) நண்பகல் 12.00 அளவில்

38. பாடசாலைப் பிள்ளைகளின் சித்திர, கைப்பணிக் கண்காட்சி ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது. அது 8 நாட்களாக நடைபெற்றதெனின், முடிவடைந்த நாள் யாது?
(1) சனிக்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) வியாழக்கிழமை

39. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் உள்ளது. அது மு. ப. 07.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் இரண்டு சந்தர்ப்பங்களைத் தருக.
(1) மு. ப. 10.00 உம் பி. ப. 01.00 உம் 2) மு. ப. 11.00 உம் பி. ப. 01.00 உம்
(3) மு. ப. 10.00 உம் பி. ப. 02.00 உம்

40. ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த சிறுவன் ஒருவன் 20 மீற்றர் தெற்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 10 மீற்றர் கிழக்கு நோக்கியும் மீண்டும் 15 மீற்றர் வடக்கு நோக்கியும் சென்று, அவ்விடத்திலிருந்து மேற்கு நோக்கி 10 மீற்றர் சென்று பயணத்தை முடித்தான். அச்சிறுவன் இப்போது தொடக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான்?
(1) 15 மீற்றர் (2) 10 மீற்றர் (3) 5 மீற்றர்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை, 2013 ஓகஸ்ட்

**வினாத்தாள் - II** *1 மணித்தியாலம் 15 நிமிடம்*

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்குத் தந்திருக்கிறீர்கள். ஆனாலும் சுதந்திரமாகப் பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதிலுள்ள சுவை இதிலே கிடைத்திடுமா? முன்பு எல்லாம் சின்னஞ்சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். பரந்த வயல் வெளிகள் எமது நிறத்தைப் போலவே பசுமையாகக் காட்சியளிக்கும். கதிர் சுமந்த நெல்லினங்கள் எம்மைத் தலையசைத்து வரவேற்கும்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) எம்மைத் தலையசைத்து வரவேற்பன எவை என இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?
.............................................................................................

(ii) விசிறியும் சுழியும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எடுதுக.
.............................................................................................

(iii) இப்பந்தியில் இடம்பெறும் ஒத்தகருத்துள்ள சொற்கள் இரண்டை எழுதுக.
.............................................................................................

(iv) பின்பு என்பதன் எதிர்கருத்துள்ள சொல்லை எழுதுக.
.............................................................................................

(v) இப்பந்தியில் இடம்பெறும் முன்னிலைப் பன்மைச் சொல்லை எழுதுக.
.............................................................................................

(vi) இப்பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.
.............................................................................................

www.Edukinniya.lk

2. (அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, அதன் கீழே கோடிடுக.

(i) ............ தொழிலுக்கு ஒப்பான தொழில் இவ்வுலகில் இல்லை. (உளவுத் / உழவுத்)

(ii) தொழிலாளி நெற்றி ........................ (வியர்வை / வேர்வை) நிலத்திலே சிந்த உழைத்தான்.

(iii) உணவு உண்பதற்கு முன் ........................ (சவுக்காரம் / சவர்க்காரம்) இட்டு கை கழுவுவது நன்று.

(ஆ) பின்வரும் கூற்று சரியெனின் (√) எனவும் பிழையெனின் ( x ) எனவும் அடைப்பினுள்ளே அடையாளம் இடுக.
(i) 'சகோதரர்கள்' உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல் (……………)
(ii) 'இருந்தனர்' என்பது இறந்தகாலப் பன்மை வினைமுற்று (……………)

3. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.
(i) Don't shout please : ……………………………………
(ii) I want to watch a match : ……………………………………

4. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துகளில் எழுதுக.
நாம் விளையாட்டு மைதானத்திற்குச் செல்வோமா?
……………………………………………………………………

5. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.
(i) cha…k (ii) doct…r

6. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.
வேகமாக ஓடுங்கள் : ……………………………………………………

7. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
மட்ட மே பாடம கியலா தென்ன :……………………………………………
……………………………………………

8. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புகளிலிருந்து தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.
(i) தமிழ்மொழியில் ……………… உயிர் எழுத்துகள் உள்ளன. (12, 217, 18)
(ii) ……………………………………… என்பவர் நுண்ணங்கிகளே உணவு பழுதடைதல், நொதித்தல் போன்றவற்றுக்குக் காரணம் எனக் கண்டுபிடித்தார்.
(லூயி பாஸ்டர், பிளெஸ் பாஸ்கல், ஜோசப் லிஸ்ரர்)
(iii) காசியப்பன் என்ற அரசனால் எழில்மிக்க குன்றாக அமைக்கப்பட்ட 'சித்திரக் குன்றம்' ……………… ஆகும்.
(சீகிரியா, சிவனொளிபாதம், பீதுருதாலகாலை)

- 9 தொடக்கம் 11 வரையுள்ள வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.

9. கீழாறோலை மேலாறோலை
எண்ணிப்பார்த்தால் பதினாறோலை
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
இக்கவிதையின் நாலாவது வரியை புள்ளிக் கோட்டில் எடுதுக.
……………………………

10. கலையெல்லாம் பெற்ற தாயே
கற்பவர் போற்றும் தாயே
உலகிலே நிலைத்த செல்வம்
உன்னருட் செல்வமன்றே
இக்கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வம் யாது? ……………………………

11. 'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை' என்னும் திருக்குறளைப் பூர்த்தி செய்க.
……………………………………………………………………

12. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துகளில் இருக்கும் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
(i) '**வனம்** போ' என்று தந்தை சொன்னதை நான் மறுப்பது தகுமா? 'வனம் போ' என்பது
……………………………………………………………
(ii) இப்புறா என்னிடம் **தஞ்சம்** புகுந்துள்ளது என்பதன் கருத்து
……………………………………………………………
(iii) சுகமாக வாழத் **தூய** காற்று, நீர், உணவு, சூழல் என்பன அவசியம். தூய என்பது
……………………………………………………………

- 13 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

13. அவை குஞ்சுகளுக்கு உணவு …………………………… (ஊட்டுகின்றது / ஊட்டுகின்றன)

14. கீதா சமையலறைக்குச் …………………………… (சென்றாள் / சென்றனர்).

15. பண்டைக் காலத்தில் வாழ்ந்த அரசர்களில் சிலர் குளங்களைக் கட்டுவிப்பதற்கு …………………… (முயன்றது / முயன்றனர்).

16. ஒரு நாட்டின் இயற்கைச் சூழலும் மனிதர்களின் நற்செயல்களும் அந்நாட்டுக்குச் சிறப்பைத் தருகின்றன. நல்ல மனிதர்கள் வாழும் நாட்டின் மதிப்பு உலகின் எல்லாத் திசைகளிலும் பரவுகின்றது. "நல்ல மனிதனிடம் இருக்க வேண்டிய சிறந்த பழக்கவழக்கங்கள்" என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெற வேண்டும், எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

- ................................................................................................
  ................................................................................................
- ................................................................................................
  ................................................................................................
- ................................................................................................
  ................................................................................................

- தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக.

17. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துகளில் எழுதுக : 40039

................................................................................................

18. எழுத்துகளில் தரப்பட்டுள்ள எண்களை உரோமன் இலக்கங்களில் எழுதுக.
(i) ஐந்து ........................ (ii) ஒன்பது ..................................


19. அடுத்துவரும் எண்களைத் தரப்பட்டுள் வெற்றிடங்களில் எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 8 | 14 | 12 | 21 | ..... | ..... |

20. பெருக்கல் "*" என்னும் குறியினாலும் பிரித்தல் "#" என்னும் குறியினாலும் குறிக்கப்படுமெனின், பின்வருவதன் பெறுமானத்தை எழுதுக.
72 # 9 * 8 = ..........................................

21. பின்வரும் பின்னங்களைக் கூட்டுக

$\frac{2}{3} + \frac{1}{4}$ = ..........................................

22. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னமாக எழுதுக ......................................

more Past papers
at www.Edukinniya.lk

23. $7\frac{8}{10}$, $\frac{25}{100}$ ஆகியவற்றைத் தசம எண்களாக எழுதுக.

$7\frac{8}{10}$ = .................................. $\frac{25}{100}$ = ..................................

- கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி 24 ஆம் வினாவுக்கு விடை தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 32 | | 27 | | 41 | | 45 |
| | 21 | | 60 | | 28 | |
| 35 | 36 | 42 | | 22 | | 18 |

24. மேற்குறித்த எண்களைப் பயன்படுத்தி 9 இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்குமுறையில் எழுதுக

| 9 இன் மடங்கு |
|---|
| |
| |
| |
| |


25. புகையிரத நிலையத்திற்கு 14:20 மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது.
இதற்கேற்பப் புகையிரதம் வரும் நேரம் யாது ? .................................. மணித்தியாலம்

26. பின்வருவன நிமலன் வாங்கிய பொருள்களின் பட்டியல் ஆகும்.
(அ) ஒரு கிலோகிராம் ரூபா 65.00 விதம் ஐந்து கிலோகிராம் அரிசி.
(ஆ) ஒரு கிலோகிராம் ரூபா 475.00 வீதம் இருநூறுகிராம் தேயிலை.
(இ) ஒன்று ரூபா 397.00 வீதம் மூன்று பால்மாப் பைக்கற்றுகள்.
(ஈ) ஒரு லீற்றர் ரூபா 220.00 வீதம் இரண்டு லீற்றர் ஐந்நூறு மில்லிலீற்றர் தேங்காய் எண்ணெய்.

(i) மேற்குறித்த தகவல்களுக்கேற்பப் பொருள்களுக்காகச் செலுத்திய பணத்தை வெற்றிடங்களில் குறிப்பிடுக.


| பொருள் | செலுத்திய பணம் | |
|---|---|---|
| | ரூபா | சதம் |
| (அ) அரிசி | 325 | 00 |
| (ஆ) தேயிலை | .................... | .................... |
| (இ) பால்மாப் பைக்கற்று | .................... | .................... |
| (ஈ) தேங்காய் எண்ணெய் | 550 | 00 |

(ii) எல்லாப் பொருள்களுக்காகவும் செலுத்தப்பட்ட மொத்தப் பணம் யாது?
ரூபா: .......................... சதம்: ..........................

27.



இங்கு A தொடக்கம் B வரையுள்ள நீளத்தை மில்லிமீற்றரில் காட்டுக.
.......................... மில்லிமீற்றர்


28. பின்வரும் நெய்யரியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்குச் சமம்?



www.Edukinniya.lk

சதுரங்கள்:..........................

29. ஒரு பாத்திரத்தில் 2 லீற்றர் 375 மில்லிலீற்றர் குளிர் பானம் உள்ளது. அக்குளிர் பானம் ஐந்து சம போத்தல்களில் நிரப்பப்பட்டது.
ஒரு போத்தலில் உள்ள குளிர் பானத்தின் அளவு யாது? .............................. மில்லிலீற்றர்

30.



(i) இவ்வுருவில் உள்ள வடிவத்தைச் சதுரமாக்குவதற்கு அதன் அகலப் பக்கத்துடன் மேலும் எத்தனை சென்ரிமீற்றரைக் கூட்ட வேண்டும்?
.......................... cm

(ii) தயார்செய்த சதுரத்தின் பரப்பளவு ஆரம்பத்தில் இருந்த சதுரத்தின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?
..........................

- 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

31. வித்துகளின் மூலமும் கிளைகளின் மூலமும் முளைக்கச் செய்யப்படும் தாவரம்
(1) பாகல் (2) பசளி (3) தக்காளி (4) புடோல்


32. காற்றின் மூலம் பரம்பல் அடையும் தாவரம்
(1) மரமுந்திரிகை (2) தேக்கு (3) கொய்யா (4) எருக்கலை


33. இலங்கைக்கேயுரிய விலங்கு
(1) நீலப் புள் (2) கிளி (3) குயில் (4) கொக்கு


34. இரவில் உலாவித் திரியும் விலங்கு
(1) ஊர்க்குருவி (2) மலைநாகணவாய் (3) காகம் (4) நத்தை


35. நன்றாக முற்றிய வித்தினை இனங்காணத்தக்க ஓர் இயல்பு பின்வருவனவற்றில் எது?
(1) நீரைக் கொண்ட பாத்திரத்தில் இடும்போது வித்து அமிழ்ந்துபோதல்
(2) வித்தில் இடையிடையே புள்ளிகள் இருத்தல்
(3) வித்தின் நிறம் கருநிறமாக இல்லாமை
(4) வித்தினை எளிதாக மாவாக்கத்தக்கதாக இருத்தல்

36. தச்சுத் தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணம்



(1)


(2)


(3)


(4)


37. பின்வரும் உருவில் உள்ள தாவரம் யது?



more Past papers at www.Edukinniya.lk

(1) நெல் (2) வெங்காயம் (3) நீர்முள்ளி (4) வெட்டிவேர்

38. இத்தையல் முறைக்கு வழங்கும் பெயர்



(1) சங்கிலித் தையல் (2) வெட்டுக்குத்துத் தையல்
(3) கம்பளித் தையல் (4) நரம்புத் தையல்

39. வீதியில் உள்ள மின் சைகைப் பலகையில் சிவப்பு நிறம் ஒளிர்வதனால் குறிப்பிடப்படுவது யாது?
(1) வாகனத்தைச் செலுத்துக என்பது (2) வாகனத்தை நிறுத்துக என்பது
(3) வாகனத்தைச் செலுத்தத் தயாராக என்பது (4) வாகனத்தை வலமாகத் திருப்புக என்பது

40. இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்கு
(1) நாய் (2) பூனை (3) பல்லி (4) சிங்கம்

41. மரவள்ளிக் கிழங்கில் அதிக அளவில் அடங்கும் போசணைப் பொருள்
(1) விற்றமின்கள் (2) காபோவைதரேற்றுகள் (3) உப்புகள் (4) புரதங்கள்

42. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித நகர்
(1) அனுராதபுரம் (2) நுவரெலியா (3) சீகிரியா (4) வவுனியா

43. இலங்கைக்கு அண்மையில் இருக்கும் நாடு
(1) சவுதி அரேபியா (2) ஜப்பான் (3) இந்தியா (4) கனடா

44. இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் இருக்கும் இடம்
(1) கட்டுநாயக்கா (2) மத்தள (3) இரத்மலானை (4) வீரவில

45. இலங்கையில் விலங்குகளை வளர்த்துப் பால் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இருக்கும் பிரதேசம்
(1) வெலிசறை (2) மகா இலுப்பள்ளம (3) ஹங்வெல்ல (4) அம்பேவெல

46. சூரியனுக்கு அண்மையில் இருக்கும் கோள்
(1) புவி (2) சுக்கிரன் (3) புதன் (4) செவ்வாய்

47. இலங்கைத் தேசப்படத்தில் சரணாலயம் எந்நிறத்தினால் குறிக்கப்பட்டிருக்கும்?
(1) கறுப்பு (2) பச்சை (3) சிவப்பு (4) நீலம்

48. சூழலுக்கு நேயமான பூச்சிநாசினியைத் தயாரிப்பதற்கு மிகவும் பொருத்தமான வித்து வகை
(1) பப்பாசி வித்து (2) வேப்பம் வித்து (3) ஆமணக்கு வித்து (4) சிறகவரை வித்து

49. கழிச்சல் நோயை உண்டாக்குவது
(1) இலையான் (2) சிலந்தி (3) நுளம்பு (4) வண்டு

50. தேவநம்பியதீச மன்னனால் கட்டுவிக்கப்பட்டது
(1) திசாவாவி (2) யோதவாவி (3) கந்தளாய்க் குளம் (4) மகாகணதரா வாவி

51. சிறிய தீக்காயத்திற்குப் பயன்படுத்தப்படும் மூலிகை
(1) ஆவரசு (2) பாவட்டை (3) சாத்தாவாரி (4) கற்றாளை

52. கொலாஜ் ஆக்கம் என்பது
(1) நீர்ச்சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்.
(2) கோடுகளின் மூலம் வரையப்படும் ஆக்கம்.
(3) பஸ்ரலைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்.
(4) கடதாசித் துண்டுகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்

53. நீல நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் கலந்து உண்டாக்கபடும் நிறம்
(1) கறுப்பு (2) வெள்ளை (3) கபிலம் (4) ஊதா

54. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பாதுகாக்க மிகவும் உகந்த முறை
(1) மரத்தின் கீழே நிற்றல்
(2) நீரினுள் இருத்தல்
(3) வீட்டில் கட்டிலின் மீது இருத்தல்
(4) சமவெளியான நிலத்தில் உலாவுதல்

55. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடு
(1) அரசம் இலை (2) அன்னம் (3) சூரியன் (4) நாகபாம்பு

56. நீர் வடிகட்டியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணத் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) பெரிய பிளாத்திக்குப் போத்தல், பஞ்சுத் திரள், பரல் படை, மணற் படை
(2) பெரிய பிளாத்திக்குப் போத்தல், பரல் படை, சில செங்கற் துண்டுகள், மணற் படை
(3) பெரிய பிளாத்திக்குப் போத்தல், பஞ்சுத் திரள், சில செங்கற் துண்டுகள், சிறிதளவு களிமண்
(4) பெரிய பிளாத்திக்குப் போத்தல், பரல் படை, சில செங்கற் துண்டுகள், சிறிதளவு களிமண்

57. காந்தத்தைக் கிட்டக் கொண்டுவரும்போது பின்வரும் எப்பொருள் கவரப்படும்?
(1) பித்தளை (2) அலுமினியம் (3) இரும்பு (4) வெள்ளி

58. உயரத்திலிருந்து விழுந்து விலா எலும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி
(1) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் துணியினால் கட்டுதல்
(2) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் தூய நீரினால் கழுவுதல்
(3) நபரை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்திருத்தல்
(4) வெந்நீரைக் குடிக்கக் கொடுத்தல்

59. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அதிவேக வீதி யாது?
(1) வடக்கு அதிவேக வீதி (2) தெற்கு அதிவேக வீதி
(3) கட்டுநாயக்கா அதிவேக வீதி (4) கொழும்பு – கண்டி அதிவேக வீதி

60. குழு விளையாட்டுகளில் இருக்கக்கூடாத இயல்பு பின்வருவனவற்றுள் எது?
(1) தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல்
(2) தம் பணியைப் பொறுப்புடன் நிறைவேற்றல்
(3) தமக்கு விரும்பியவாறு செயற்படுதல்
(4) வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக்கொள்ளல்

www.Edukinniya.lk